No of Printed pages: 4 Roll No

# திறன்வளர் ஆசிரியர் மன்றம் மற்றும் வெற்றிக்கு வழி
# மாதிரிப் பொதுத்தேர்வு – ஜனவரி 2016
# தமிழ் முதல் தாள்

காலம். 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

| | | |
|---|---|---|
| அறிவுரை | : | அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். |
| குறிப்பு | : | 1. இவ்விடைத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.<br>2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். |

## பிரிவு–I (மதிப்பெண் : 20)

### பகுதி-1

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6 x 1 = 6**

1. **இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர்_________**
   அ) பாரதியார் ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) கவிமணி
2. **இளங்கோவடிகள் _________ நாட்டைச் சேர்ந்தவர்.**
   அ) சோழநாடு ஆ) சேர நாடு இ) பாண்டிய நாடு
3. **நற்றிணையைத் தொகுப்பித்தவர்_________**
   அ) பன்னாடுதந்த மாறன்வழுதி ஆ) உக்கிரப்பெருவழுதி இ) இளம்பெருவழுதி
4. **அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது .........................**
   அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்ம விபூஷன்
5. **உலகம் என்ற தமிழ்ச்சொல் ............. என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.**
   அ) உலகு ஆ) உலவு இ) உளது
6. **பகைவனிடம் அன்புகாட்டு எனக் கூறிய நூல் _________**
   அ) பகவத்கீதை ஆ) நன்னூல் இ) பைபிள்

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக** **6 x 1 = 6**

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு _________ அமைந்துள்ளன.
8. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டியவர் _______
9. திருநாவுக்கரசரின் தமக்கையார் _________
10. நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமைந்த அரியகலை _________
11. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத்தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் __________
12. வள்ளலாரின் இயற்பெயர் _________

### பகுதி - 3

**பொருத்துக.** **4 x 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. இறை | - | பொறுத்தல் |
| 14. மேதி | - | சிங்கம் |
| 15. மடங்கல் | - | தலைவன் |
| 16. நோன்றல் | - | எருமை |

## பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க.** **4 x 1 = 4**

17. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
18. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
19. பெண்கள் உரிமை பெற்றுப் புதுஉலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
20. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி பயன்படுகிறது.

## பிரிவு–II (மதிப்பெண் : 20)

## பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. ஊக்கமுடையார் ஒடுக்கம் எதனைப் போன்றது?
22. ஏலாதி- நூற்குறிப்பு எழுது.
23. குகனின் வேண்டுகோள் யாது?
24. "நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்?" யார், யாரிடம் கூறியது?
25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?
26. வேந்தற்குரிய பொருள்கள் யாவை?
27. பண்பு எனப்படுவது யாது?

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
29. மொழிமாற்றம் என்றால் என்ன?
30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப்பகுதிகள் யாவை?
31. ஞாலம் பெயர்க் காரணம் கூறு.
32. சத்தியதருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
33. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?
34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?

## பிரிவு–III (மதிப்பெண் : 24)

## பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?
36. கம்பராமாயணம் - சிறுகுறிப்பு வரைக.
37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுபவை யாவை?
38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.
39. 'சாதனைப்பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

## பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு–IV (மதிப்பெண் : 10)

**45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க 5**

**ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்**
**அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை**

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
2. ஆற்றுதல் என்பது யாது?
3. இப்பாடலின் ஆசிரியர் யார்?
4. பண்பெனப்படுவது - பிரித்தெழுதுக.
5. செறாஅமை - இலக்கணக்குறிப்பு எழுதுக.

**46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5**

வள்ளலார், இறைவன் ஒருவனே; அவன் ஒளி வடிவினன் என்பதனையும் அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப்பெருங்கருணையே கருவி என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார். சாதி, சமய, இன வேறுபாடுகள் கூடாது; எவ்வுயிரையும் கொல்லலாகாது; புலால் புசித்தல் கூடாது; எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணுதல் வேண்டும்; ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்; உலக மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாம்.

1. வள்ளலார் இறைவனை எவ்வடிவில் கண்டார்?
2. இறைவனை அடைவதற்கான கருவி எது?
3. சமரச சுத்த சன்மார்க்க சங்கம் எங்கு நிறுவப்பட்டது?
4. மனிதர்களிடையே எத்தகைய வேறுபாடுகள் கூடாது?
5. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை நிறுவியவர் யார்?

## பிரிவு–V(மதிப்பெண் : 26)

### பகுதி -1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 2 x 8 = 16**

47. அ) "தேரா மன்னா" எனக் கண்ணகி விளித்துக் கூறியன யாவை?

**(அல்லது)**

ஆ) பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாட்டினை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி–2

**49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10**

அ) 'ஞாலம்' எனத் தொடங்கும் குறள்.
ஆ) 'கெடும்' என முடியும் குறள்.
இ) 'விடுநனி' எனத் தொடங்கும் கம்பராமாயணப்பாடல்.
ஈ) 'நல்லதாய்' எனத் தொடங்கும் பெரியபுராணப்பாடல்.

---